உ

கடவுள் துணை

  

மதுரை ஜில்லா பெரியகுளம் தாலூகா
சுக்கான்கல்பட்டி என்ற காளாக்ஷி புரம்,

மகா-ள-ள-ஸ்ரீ V. N. S. சீனியப்ப நாடா
ரவர்கள் குமாரர்,

# முத்துச்சாமி பாண்டியன்

இயற்றிய

## தங்கரத்தின பாமாலை என்னும்

# புவனேந்திரன் சுருக்கம்.

## முதற் பாகம்

மதுரைஜில்லா பெரியகுளம் தாலூகா சின்னமனூர்
கருங்கட்டாங்குளம் மகா-ள-ள-ஸ்ரீ
ஸ்ரீமான் S. பொன்னுச்சாமித் தேவரவர்கள்
விருப்பத்தின்படி

சுக்கான்கல்பட்டி, என்ற காளாக்ஷிபுரம்
V. N. S. S. அய்யாச்சாமி நாடாரவர்களால்
...றக்கீம் பிரஸில் பதிக்கப்பெற்றது

...லை] 1930 [அணா 1

காப்பி—1000

Q23:417
N30,
186230

உ

## வெண்பா

சிம்மா ஜனத்தோனுஞ் சீர்புவ னேந்திரனின்
அம்மானையைச்சுருக்கி அறைந்திடவே—யிம்மானில்
அருமைசேர் தெம்பாங்கு அலங்காரப்பாடலுக்கு
கருணைச்சர்வே சுரனேகாப்பு

## தங்கரத்தின மெட்டு:

1. வர்னப்பசுங்கிளியே வாசமரிக்கொழுந்தே
சொர்னக்களஞ்சியமே என் தங்க ரத்தினமே
சோலைக்கருங்குயிலே என் பொன்னுரத்தினமே

2. புவனேந்திரவேந்தும் புத்திசிகாமணியும்
நவநீதவித்தையெல்லாம் என் சிங்காரச்சோடி
நாடிப்படித்தவர்கள் என் தங்கமேவாடி

3. வித்தையிலும்வல்லவர்கள் விளையாட்டில்நல்லவர்கள்
செத்தார்தன்னை எழுப்பும் என் சீனிக்கல்கண்டே
செகஜாலமந்திரியே என் மாணின்பூச்செண்டே

4 கருணைக்கடல்சாந்தன் கருங்கட்டாநகர்வேந்தன்
அருமைஞாயவான்போல அல்விமலர்க்குணமே
அரசனும் மந்திரியும் மல்லிகைப்பூமணமே

5. மங்கையிழங்கொங்கையர்கள் மடலூரும்பேரழகன்
தங்கப்பொன்னுச்சாமிபோல என் தருமபொக்கிசமே
தாஸ்உகக்கெம்பீரர்கள் என் அருமவிஸ்திரமே

6, தேனூ நம்சொல்லமுர்தோன் சீமான்பொன்னுச்சாமி (முன்னே
பானூலயங்கேற்றி என் பஞ்சவர்னக்கிளியே
பருசுபெற்றேன்சொர்னமணி கொஞ்சுந்தர்னமணியே

7. போசபுவனேந்திரனும் புத்திசிகாமணியும்
தேசவளங்கள்பார்த்து என் தங்கரத்தினமே
சேர்ந்தார்கள்பூஞ்சோலையில் என் பொன்னுரத்தினமே

8. சாதங்கறிகொண்டுவந்தால் சாப்பிடலாமிப்படியில்
நீதமுள்ளமந்திரியே என் நீதிகுஞ்சரமே
நீபோயிக்கொண்டுவா என் சோதிரஞ்சிதமே

9. சென்றுவாரேன்என்றெழுந்து சேர்ந்தான்தங்கமாபுரி
அன்றிரவுதங்கிடவே அங்கு அம்மாளிகையில்
அரசனும்தனித்திருந்தான் இங்குஇச்சோலையிலே

10. கோடையிடிசத்தம்போல குளத்துத்தண்ணீர்விலக
ஆடாம்பாத்துடனே என் சிங்காரச்சோடி
ஐந்துதலைநாகம்வா என் தங்கமேவாடி

11. வெட்டினான் இரண்டு துண்டாய்வீழ்ந்ததுரத்தினங்கள்
யெட்டிஎடுத்துக்கொண்டு இகபரசுகமே
ஏகினான்படித்துரைக்கு அகமகிள்முகமே

12. தண்ணீரில்காலைவைக்க தரைகாணநீர்விலக
வண்ணமுள்ளமாளிகையில் என் தங்கரத்தினமே
வழங்கமெல்லாம்பார்த்துநின்றான்பொன்னுரத்தினமே

13, மின்னவிடையழகி மினுக்கும்உடையழகி
அன்னநடையழகி என் சிங்காரசோடி
ஆரணங்கைப்பார்த்துநின்றான் என் தங்கமேவாடி

14. கோலக்கருங்குயிலே கொஞ்சும்தோகைமயிலே
வாலயிளம்வொயிலே என் தங்கரத்தினமே
வஞ்சியரைப்பார்த்துநின்றான் என் பொன்னுரத்தினமே

15. எந்தஊர்யார்குழந்தை என்னாசக்கண்மணியே
சிந்தைக்கினியராஜா சித்திரப்பொன்னிறையே
செப்புமய்யாஆணழகா என் வித்தாரஎனதுரையே

16. உத்தமியேநாகந்தன்னை ஓங்கிநான்வெட்டினண்டி
ரத்தித்னைதப்பாரடிநீ என் நாகரத்தினமே
நானேகொண்டுவந்தேனடி என் சீவரத்தினமே

17. ஆங்காரநாகமதை யாருங்கொல்லவாய்க்காதே
வாங்காணும்பார்த்திடலாம் என் வல்லாழகண்டா
வந்துமேலேபார்த்துவந்தார் நல்லரவதுண்ட

18. சித்தமிகமகிழ்ந்து சேர்ந்துமேவாழ்ந்திருந்தார்
புத்திசிகாமணியும் என் தங்கரத்தினமே
பூஞ்சோலைதேடிவரான் என் பொன்னுரத்தினமே

19, அன்னங்கரிவகைகள் அப்பழப்பூபாயாசம்
மன்னவனுக்காகயெண்ணி என் மாதுழங்கனியே
மலர்ச்சோலைவந்துபார்த்தான் என் கோதில்லாமணியே

20. ஆசாரமானவளேஆவரம்பூ மேனியாளே
ராஜனங்குகாணேயடி என் ஞாயக்கற்பகமே
நல்லகுதிரைநிர்க்க என் தூயப்பொற்பகமே

21. தந்தையர்கள்சொல்லியதும் சங்கதிகடந்ததுவும்
சிந்தயிலெண்ணிமயங்கி என் சிங்காரச்சோடி
தேடினானேசோலையெல்லாம் என் தங்கமேவாடி

22. மாடப்புறு அன்னங்களே மணிப்புறு வேகாசங்களே
காடகவுதாரிகளே கானமாமயிலே
காவலனைக்காணீர்களோ மானே பூங்குயிலே

23. அல்லிசெந்தாமரையே அடுக்கு முல்லைசெண்பகமே
மல்லிகைரோஜாமருவே மாமலர்வாசங்களே
மன்னவனைக்காணீர்களோ பூமலர்நேசங்களே

24. தென்னைகமுகுகளே தேக்கேபலாமரமே
கொன்னையேமாதுளையே கோங்குபுரசுகளே
கொற்றவனைக்காணீர்களோ ஓங்கு அரசுகளே

25. சிங்கமேகரடிகளே சிறுபுலியேவேங்கைகளே
பொங்குமதயானைகளே பொருந்துமான்மரையே
புண்ணியனைக்காணீர்களோ திருந்தச்சொல்லுரையே

26. மங்கையர்கள்மையலிலே மயங்கித்தானேகினானே
அங்குமிருந்தாலும்போதும் என் தங்கரததினமே
ஆருயிருண்டாக்கலாமே என் பொன்னுரத்தினமே

27. பூவாணிபட்சிவீட்டில் புரவிகளைக்கட்டிவிட்டு
காவலனைத்தானினைந்து என் சிங்காரச்சோடி
காசிநதிசென்றுவிட்டான் என் தங்கமேவாடி

28. சூழஞ்சனபாத்திரைக்கு சோகத்துடன்சென்றானினி
எழடுக்குமாளிகைக்குள் என் இன்பரத்தினமே
இருப்பவர்விதத்தைச்சொல்வேன் அன்பாயித்தினமே

29. இரவுபகலரியா எழடுக்குமாளிகைக்குள்
அரசனும்ஆரணங்கும் என் தங்கரத்தினமே
ஆடினார்சதுரங்கன் என் பொன்னுரத்தினமே

30. எங்கன்காலாட்களினால் என்னரசேஉன்னுடைய
மந்திரிக்குமோசமென்றாள் மாதுசிரோன்மணியும்
மயங்கியவன்திண்டில்சாய்ந்தான் சாதுசிரோன்மணியும்

31. பன்னீரள்ளித்தெளித்து பாங்காய்விசிரிவீச
மன்னவனும்கண்விழித்து என் மாசில்லாமணியே
மந்திரியேஎன்றழுதான் நேசக்கண்மணியே

32. என்னாளில்நான்காண்பேன் என்னுடையமந்திரியே
பொன்னுஞ்சிகாமணியே என் தங்கரத்தினமே
பொய்யாதவாசகனே என் பொன்னுரத்தினமே

33. செத்தாரையும்பிழைக்க செய்யுந்தீரமந்திரியே
புத்திசிகாமணியே என் பூலோகஇந்திரனே
பொன்னேநவமணியே என் சாலோகதந்திரனே

34. என்றழுதான்மன்னவனும் ஏந்திழையாள்தேற்றியபின்
மின்னுமணிமண்டபத்தில் என் தங்கரத்தினமே
மேலேறிவந்திருந்தார் என் பொன்னுரத்தினமே

35. மதனும்ரதியும்போல மய்யமணிமண்டபத்தில்
சதுரங்கமாடினார்கள் என் சிங்காரச்சோடி
தையலரும்மன்னவனும் என் தங்கமேகூடி

36. இசைவிழங்கும்இன்னவருக்கு ஈசான்யமூலையிலே
விசயதரமன்னமனும் விஸ்திரகானகத்தில்
வேட்டைகளாடியங்கு சித்திரமாவனத்தில்

37. ஆனைகாடிபுலி ஆங்காரவேங்கைகளும்
மானுமறைபன்றிகளும் பந்திகளும்கொன்று
மயக்கத்தால்தாகமீர விந்தையுடன்சென்று

38. தரையரசன்சோபத்திக்கு தண்ணீர்கொண்டுவர
விரைவுடனேமந்திரியும் என் சிங்காரசோடி
விளையாடும்சோலைசென்றான் என் தங்கமேவாடி

39. ஆசாபாசந்தீர அமைச்சனும்நீர்குடித்து
கூசாவில்நீரைமொந்து கொஞ்சும்பூங்குயிலே
கொண்டுதிரும்பயிலே மிஞ்சும்மாமயிலே

40. கதிரவனொழிபோல கண்டானேகண்மணியே
குதிரையின்மேல்ஏரிவந்து என் தங்கரத்தினமே
கோமான்தனக்குரைப்பான் என் பொன்னுரத்தினமே

41. கொங்கையோபவழநிறம் கூந்தலோமேகநிறம்
அங்கமோதங்கநிறம் என் சிங்காரச்சோடி
ஆலிலையோபொன்வயறு என் தங்கமேவாடி

42. புருவமோமதனவில்லு பூவரும்போமாதின்பல்லு
பருவமோயிளம்பருவம் பகட்டிடும்உடையே
பார்த்தாலும்போதுமந்த திகட்டிடாநடையே

43. என்றுமொழிகேட்டவுடன் எழுந்தானேமன்னவனும்
சென்றார்கள்சேனையெல்லாம் சிங்காரமாய்நடந்து
சித்திரபூஞ்சோலைக்கு பொங்குவழங்கடந்து

44. வாவியைவட்டஞ்சுற்றி வளைத்தார்கள்சேனையெல்லாம்
தேவியும்மன்னவனும் தேனூரும்மாளிகையில்
சேர்ந்துகுதித்துவிட்டார் தாமொருநாளிகையில்

45. நிலையாகக்காவலுக்கு நின்றார்கள்நானூர்பேர்
வலைகாரரும்குணிகாரரும் என் வர்னமடமானே
வந்திளுத்தும்காணவில்லை என் சொர்னக்குடத்தேனே

46. நீங்காதொருவாரம் நீந்தியுந்தான்காணவில்லை
ஏங்கிமனங்கலங்கி என் தங்கரத்தினமே
ஏகினார்கள்ஊரைத்தேடி என் பொன்னுரத்தினமே

47. கோதையைஎன்னிடத்தில் கொண்டுவந்துசேர்ப்போர்க்கு
பாதிப்பூமிபங்குஎன்று என் பஞ்சரத்தினமே
பறையடித்தார்தேசமெல்லாம் கொஞ்சயித்தினமே

48. குவலயத்தில்ஓசைகேட்டு கோதைபிறுமணத்தி
கவலையெல்லாம்தீர்ந்ததினி என் கட்டிச்செங்கரும்பே
காசிநதிபோனேன்வந்தால் என் கிட்டும்பூவரும்பே

49. கலியாணம்செய்துநம்மள் கண்ணாலேபார்த்திடலாம்
சலியாமல்மன்னனிடம் என் சாதுரியமொழியே
சாற்றியேமருந்துசேர்த்து மாதுதனிவளியே

50. பாப்பாத்திசோலைசென்று 18230 பார்த்துஒருநிழலில்
கூப்பாடுபோட்டளுதாள் கோலவினிமாது
குணமகனும்செத்தானென்று சாலமாயப்போது

51. மன்னனிறந்தாலும் மகனிருந்தால்போதுமென்று
உன்னையேநம்பியல்லோ என் உல்லாசத்துரையே
உயிர்வைத்துநானிருந்தேன் என் சல்லாபநிரையே

52. மங்கையளுதகுரல் மாளிகைக்குள்ளிருந்தோர்
அங்கம்உருகிடவே என் தங்கரத்தினமே
அவர்கள்வெளியில்வந்தார்கள் என் பொன்னுரத்தினமே

53. அம்மாஅழுகாதே ஆரம்மாசெத்ததென்றான்
சும்மாபோஎன்றுரைத்தாள் தோகைபிறுமணத்தி
துரைமகனும்கெஞ்சிக்கொண்டு வாகாய்தானமர்த்தி

54. மப்பானமுண்டைதன்னை மாளிகைக்குள்வைத்திருந்தார்
எப்பவரும்வேளைஎன்று இலங்கும்மாளிகையில்
இன்னவளும்காத்திருந்தார் துலங்குநாளையில்

55. வசமாகத்தானஞ்செய்ய வஞ்சியரும்போனபின்பு
ரசத்தில்விசங்கலக்கி ஞாயவாளப்போல
ராசனுக்குதான்கொத்தாள் மாயவிசத்தாலே

56. குடித்தவுடன்ஓங்கரிக்க குமட்டிக்குடல்புரட்ட
துடிதுடித்துகண்சுளல என் சிங்காரச்சோடி
சோர்ந்துஎம்பெண்ணேஎன்றான் தங்கமேவாடி

57 மங்கையரும் வந்துபார்த்தாள் மடிந்தபுவனேந்திரனை
தங்கமே நவமணியே என் தாளம்பூ மடலே
தனித்துவிட்டு சென்றீரே என் சூழுந்தேன் கடலே

58. பூலோக ரம்பையின்பம் போதுமென்றோ எண்ணிநீங்கள்
மேலான மாதர்களை என் மின்னுஞ் சிரத்தழகா
மேவிவரச் சென்றீர்களோ என் பொன்னுங்கரத்தழகா

59. பூவுலகப் பெண்ணாசை போதாதோ மன்னவனே
தேவருலகத்துக்கோ என் தேனே திரவியமே
சென்றீரெனை விடுத்து என் மானே மரகதமே

60. கண்ணீர்வடித்துக்கொண்டு கணவனுக்குஎண்ணையிட்டு
வண்ணமணிப்பெட்டிக்குள்ளே என் தங்கரத்தினமே
வகையாகவைத்துவிட்டு என் பொன்னுரத்தினமே

61. மாலாய்மேபூமிசென்றால் மந்திரியைகண்டிடலாம்
சீலமுள்ளமன்னவனை என் சிங்காரத்துரையே
சீறாஎழுப்பிடலாம் என் தங்கமாத்துரையே

62. வாடிகிருக்கியென்று வாவியைதான்கடந்து
கூடிவளிநடந்தாள் என் கொலுமிச்சங்கனியே
கோமானரண்மனைக்கு என் எலுமிச்சங்கனியே

63. கண்டானந்தச்செங்கரும்பை காதலியேஎன்றுசொல்லி
கொண்டானவள்மேல்மையல் கோலக்குயிலன்னமே
கோதையதர்க்கேதுரைப்பாள் நீலமயில்சொர்னமே

64. மன்னவாஉமைச்சேர மனந்தானெனக்குமய்யா
அன்னசத்திரமுங்கட்டி ஆறுச்சிமணியே
அதில் நாற்பத்தைந்துநாளும் பேரீச்சங்கனியே

65. இதர்க்குமுன்செய்திருந்தேன் என்னுடைய
(பிறுத்தனையே
அதர்க்கானசாமான்வேண்டும் என் அழகுமணாளா
அவ்வளவும்தான்கொடுத்தார் என் வாசக்குணாளா

66 சத்திரமும்கட்டியன்ன தானங்கள்கொடுத்துவந்தாள்
புத்திசிகாமணியை என் தங்கரத்தினமே
பூவைஎதிர்பார்த்திருந்தாள் என் பொன்னாரத்தினமே

67. திசைகள்எங்கும்தான்தேடி சிந்தைமிகவாடி
விசையநகர்தன்னைநாடி என் சிங்காரச்சோடி
விசாரித்தான்சங்கதியை என் தங்கமேவாடி

68. பாப்பாத்திவாலாரும் பாவைவந்தசங்கதியும்
வாய்ப்பாரொருவன்எல்லாம் வாலயிழமயிலே
வழுத்தினான்மந்திரிக்கு என் நீலக்கருங்குயிலே

69. வெக்கிட்டம்மாள்மைந்தனென்று வேக
(முடனங்குசென்று
இங்கிதமோதிரத்தை என் தங்கரத்தினமே
ஏமாற்றிவாங்கிகொண்டான் என் பொன்னாரத்தினமே

70. வீட்டில்படுத்திருமென்று வெளியேரிசத்திரத்தில்
தாட்டீகமாகச்சென்று என் சிங்காரச்சோடி
சாப்பாடுசெய்துநின்றான் என் தங்கமேவாடி

71. பிரியாச்சிநேகிதர்கள் பிரிந்ததுண்டோ என்றுகேட்டான்
தெரிந்தாரைப்போலிவனும் தேனேமயங்கினான்
திகைத்து முகத்தைப்பார்த்தான் தானே தியங்கினான்

72. சிறையிலடைக்க அந்தமேதவியும் உன்சங்கதியை
உரைத்திடென்றுகேட்கவே என் தங்கரத்தினமே
ஒன்றுந்தெரியாதென்றான் என் பொன்னாரத்தினமே

73 அம்மாநான்சன்பாசி யாத்திரைக்குப்போயிவந்து
உம்முடையசத்திரத்தில் என் உத்தமிபெண்மணியே
உண்டேன்அமுதமென்றான் என் பத்தினிக்கண்மணியே

74. என்னய்யாஇவ்விதமாய் ஏடாசிபேசுகிறீர்
உன்னையநினைத்தல்லவோ என் உலகப்பொன்பணியே
உயிர்வைத்துநானிருந்தேன் என் திலகக்கண்மணியே

75. என்றுநடந்ததெல்லாம் எடுத்துரைத்தாள்மந்திரிக்கு
இன்றுஒருநாள்தானைய்யா என் ஏலக்கனிச்சரக்கே
இருக்குதுதவணை என்றாள் என் ஞாலமணிநிரக்கே

76. வஞ்சிவாலார்களெல்லாம் வகைவிபரமாகச்சொல்ல
விஞ்சையால்மயக்கிவிட்டு என் சிங்காரச்சோடி
விளங்கும்மாளிகைசேர்ந்தார் என் தங்கமேவாடி

77. பொன்னுலவும்மாளிகையில் பூட்டிவைத்தமன்னவனே
மின்னரசிகொண்டுவந்தாள் மிஞ்சும்ரத்தினமே
மீளும்உயிருண்டாக்க கொஞ்சமெத்தினமே

78- மன்னவனைத்தானெழுப்ப மந்திரங்கள்செய்யும்போது
கன்னியைமரவில்வைத்து என் தங்கரத்தினமே
காவலனைஎழுப்பினனே என் பொன்னுரத்தினமே

79. ஆண்டவன்கிருபையினால் அழகாகமூவர்களும்
வேண்டியவிதங்களெல்லாம் என் சிங்காரச்சோடி
வித்தாரமாய்பேசினார்கள் என் தங்கமேவாடி

80. வருடமும்ஒன்றாகும்வந்து வஞ்சிபுங்கெற்பமென்று
திருமாதைக்கூட்டிக்கொண்டு என் சிஙகாரப்பூவரும்பே
சீகில்வைத்திபூட்டிவிட்டு என் வங்காரச்செஙகரும்பே

81. சோலைவழங்கடந்து தோகையும்மூவருமாய்
ஆலாமரத்தடியில் என் தங்கரத்தினமே
அமைந்திருந்தாருல்லாசமாய் என் பொன்னுரத்தினமே

82. தொடுத்தகதைதானிருக்க சொச்சக்கதையையினி
எடுத்துரைப்பேன்அலங்காரமாய் என் சிங்காரச்சோடி
இரண்டாம்பாகம்தனிலே என் தங்கமேவாடி

83. புவனேந்திரன்வாழ்க பூலோகரம்பைவாழ்க
சிவயோகபோதன்புத்தி சிகாமணிவாழ்க
செகமெல்லாம்தான்செழித்து சுகமாகவாழ்க

84. வாசலலங்காரன்வைரமணி கால[illegible]த்தோன்
ராசபொன்னுச்சாமிவாழ்க நாட்டோரும்வாழ்க
நலமாகஇந்தநூல்க் கேட்டோரும்வாழ்க

85. சத்தியர்தன்குலத்தோன் சார்ந்தோர்தனைமதிப்போன்
முத்துச்சாமிவாழ்கவாழி என் தங்கரத்தினமே
முழுதும்படிப்போர்வாழ்க என் பொன்னுரத்தினமே

கூடிய சீக்கிரம் இரண்டாம்பாகம் வெளிவரும்

ஹக்கீம் பிரஸ், சென்னை—1930.